1975 அக்டோபர் 27]

கல்கரி, நிலக்கரி ஒதுக்கீடு

*77 வி—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகள் உபயோகத்திற்கான கல்கரி, நிலக்கரி ஆகியவைகள் பங்கு விகிதத்தில் (Quota System) ஒதுக்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாட்டில் சிறுதொழில் பிரிவுகளுக்குச் சட்டப்படிக்கான பங்களவு முறையின் கீழ் கல்கரியும், வணிகர்களிடமிருந்து ஒரு வாகனுக்குக் குறைவாக நிலக்கரி தேவைப்படுவோருக்கு மட்டும் தனி அடிப்படையிலான பங்களவு முறையின் கீழ் நிலக்கரியும் வழங்கப்படுகின்றன. இவ்விரு முறைகளும் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுத் தொழிற்சாலைக்கு உபயோகப்படுகிற கல்கரியும், நிலக்கரியும் தொழிற்சாலைகளுக்கு இன்ன இன்ன விகிதாசாரப்படி ஒதுக்குகிற முறையை மத்திய அரசு மேற்கொள்ளுகிறதா? அல்லது நமது மாநில அரசே அத்தகைய அதிகாரத்தைப்பெற்று எந்த எந்த தொழிற்சாலைக்கு எவ்வளவு விகிதாசாரம் என்பதை முடிவு செய்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில்—ஸ்டாசுடரி கண்டிரோல், நான்-ஸ்டாச்சுடரி கண்டிரோல் என்று இரண்டு. Statutory control for the distribution of coke. என்ற வகையில் இருக்கிறது. இதுபற்றி மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஒதுக்கியிருக்கிறது. அதை மாநில சர்க்கார் விநியோகம் செய்கிறது. ஸ்டீம் கோல், லாப் கோல், சாப்டு கோல் ஆகியவற்றுக்கு கட்டுப்பாடு இல்லை.

Drinking water, electricity supply in slum areas

* 78 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the slums in Madras City are provided with drinking water and electricity facilities; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU MANNAI P. NARAYANASAMY :

(*a*) & (*b*) : A statement @ is placed on the table of the House.

திரு. என். கே. பழனிசாமி : இன்னும் பல சேரிகளில் மின்சார வசதியும், தண்ணீர் வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதற்குத் திட்டமிட்டு வருஷாவருஷம் இவ்வளவு என்ற அடிப்படையிலாவது இவற்றை வழங்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : குடிசைமாற்று வாரியத்தின் மூலம் எல்லாப் பகுதிகளிலும் இது திட்டமிட்டு செய்யப்பட்டு வருகின்றது. எந்தெந்த இடத்தில் குறை இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நிவர்த்திக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : என்னுடைய தொகுதி டொம்மிக் குப்பத்தில் குடிசைமாற்று வாரியத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கே மின்சார வசதி அளிக்கப்படவில்லை. குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. மின்சார ஒயர்கள் இழுக்கப் பட்டும், மின்வாரியம் மின்வசதி கொடுக்காததற்குக் காரணம் அவர்கள் 10 வருஷ காரண்டி கேட்கிறார்கள் என்கிறார்கள். இதை உடனடியாகக் கவனித்து அந்த வீடுகளுக்கு மின்வசதி, தண்ணீர் வசதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இங்கு கொடுக்கப் பட்டிருக்கிற 96 திட்டங்களில் நான்கு திட்டங்களுக்கு இன்னும் தெருவிளக்கு, வீட்டு மின்சார விளக்கு வசதி கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இருக்கிற கவலை யெல்லாம் இந்தத் திட்டத்தையே டாக்டர் கலைஞர்தான் தீட்டினார் அவர் பெயரால் அமைந்திருக்கிற கலைஞர் கருணாநிதி நகருக்கு தெருவிளக்குப் போடவில்லை என்றால் அப்படிப் போடாததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தெருவிளக்குகள் போடுவதற்கு வேண்டிய உபகரணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால்தான் அந்த வேலைகள் முடியாமல் இருக்கின்றன.

@ 653–679-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.